| சாட்சி : PW1 முருகேசன் | OS. 24/2016 | 25.08.2023 |
|---|---|---|

**PW1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது தகப்பனார் 2007 ல் தான் இறந்தார் என்றால் சரிதான். சந்திரா, பாஸ்கர், கணேசன், உமாமகேஸ்வரி ஆகியோர் தைலானின் வாரிசுகள் என்று சொல்லியிருப்பது தவறு என்றால் மேற்படி நபர்கள் இறந்து போன எனது சகோதரர் கந்தனின் வாரிசுகள் ஆவார்கள். வா.சா.ஆ.1 ஆவணமானது இந்த வழக்கு சொத்தான வீடு மற்றும் தென்னந்தோப்பிற்கானது. வா.சா.ஆ.1 எனது அப்பா கிரையம் வாங்கிய சொத்து என்றால் எனது சகோதரர் நடராஜ் எனது அப்பா பெயரில் கிரையமாக வாங்கிய சொத்து. நடராஜன் தான் எனது அப்பா பெயரில் கிரையம் வாங்கியதாக எனது வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் இதுவரை கேட்கவில்லை அதனால் சொல்லவில்லை. எனது சகேதாரர் நடராஜனுக்கு 84 –85 வயது இருக்கும். அவர் வேலூரில் உள்ள கந்தசாமி கண்டர் கல்லூரியில் பேராசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்று அங்கேயே வசித்து வருகிறார். மேற்படி நடராஜன் என்பவர் தான் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றிருந்தால் அவர் தனியாக எதிர்வழக்குரை செய்திருப்பார் என்றும் அவ்வாறு இல்லாததால் தான் மற்ற பிரதிவாதிகளின் வழக்குரையை ஒத்தேற்பு செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாத்தா பெயர் வைத்தியலிங்கம். அவருக்கு சொத்து எதுவும் இல்லை. 6ம் பிரதிவாதி பட்டு என்பவர் மீது இதே நீதிமன்றதில் அ.வ.எண்.152/2006 என்ற உறுத்துக்கட்டடளை வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கில் 6ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல்

செய்து வழக்கை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். அவரது எதிர்வழக்குரையில் 01.10.2004 ம் தேதி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட்டே பொய்யானது. தானசெட்டில்மெண்ட் ஆவணம் எப்போது எனக்கு தெரிய வந்தது என்றால் எனது அப்பா சொல்லி எனக்கு தெரியும். 6 ம் பிரதிவாதி தரப்பில் செட்டில்மெண்ட் உள்ளதாக சொன்ன பிறகு அதை ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் அதற்காக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அ.வ.எண்.152/2006 என்ற வழக்கில் பின்னிட்டு பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்வதாக கோரி நீதிமன்றத்தில் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை. எனது தகப்பனாரை நானோ எனது சகதேரர்களோ பராமரிக்காததால் 6 ம் பிரதிவாதி பட்டு வீடான கோவிலடியில் தான் அவர் இறக்கும்வரை இருந்தார் என்றால் சரியல்ல. அவர் இறந்தது திருமங்களத்தில். 6 ம் பிரதிவாதி எனது தாயாருக்கு ஒரே மகள் ஆவார். கந்தன் இறந்த பிறகு அவரது வாரிகளுக்கு நான் அடைக்கலமாக இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் அவரது வீட்டிற்கு அவ்வப்போது சென்று சாப்பிட்டுவருவேன். 11 ம் பிரதிவாதி மதுரைமுத்து அவரது முதல் மனைவி இறந்த பிறகு 2 வது திருமணம் செய்துள்ளார். 11 ம் பிரதிவாதி தான் 6 ம் பிரதிவாதியின் அனுமதியுடன் வழக்கு சொத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் இல்லை. தாவா சொத்தின் பட்டா, சிட்டா, அடங்கல் அனைத்தும் 6 ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்றால் இல்லை. பட்டா, வீட்டுவரி ரசீது எல்லாம் நான் தான் வாங்கிவைத்துள்ளேன். வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.7 ஆவணங்கள் அனைத்தும் 6 பிரதிவாதிக்கு தெரியாமல் நான் மாற்றியுள்ளேன் என்றும் அவற்றை ரத்து செய்ய 6 ம் பிரதிவாதி

நடவடிக்கை எடுத்துள்ளார் என்றால் நான் மாற்றவில்லை. வழக்கு சொத்து அல்லாது வேறு குத்தகை நிலம் எனது அப்பாவிற்கு இருந்ததா என்றால் இல்லை. திருமங்களத்தில் புல எண்.92/1 ல் உள்ள 24 செண்ட் நிலம் மற்றும் மற்றொரு 11 செண்ட் நிலங்களில் எனது அப்பா குத்தகைதாரராக இருந்தாரா என்றால் இல்லை. மேற்படி குத்தகை நிலங்கள் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 2004 லேயே எனது தகப்பனார் 6 பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் எழுதிக்கொடுத்து அவர் அனுபவம் செய்து வருகிறார் என்றும் அ,.வ.எண்.152/2006 வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் நான் கோரிய பாகப்பரிவினை பரிகாரம் எனக்கு கிடைக்கத்ததக்கதல்ல என்பதால் எனது வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.